# Code of conduct

## மாணவியர் நடத்தை விதிமுறைகள்

1. காலைநேரக் கல்லூரி மாணவியர் ஒவ்வொரு நாளன்றும் காலை 9.20 மணிக்கு காலை வழிபாட்டில் கலந்து கொள்வது கட்டாயமாகும். வகுப்பறைக்குச் செல்லும்போது வரிசையாகவும், அமைதியாகவும் செல்வது மாணவியருக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்க்கும்.

2. மாணவியர்க்குப் போதுமான அளவு வருகைப்பதிவு கட்டாயமாகும். வகுப்பிற்குக் காலதாமதமாக வருவது தவிர்க்கப்பட வேண்டும். தொடர்ந்து காலதாமதமாக வரும் மாணவியர் உரிய விளக்கங்களுடன் பெற்றோர் கையொப்பம் பெற்று வருதல் வேண்டும்.

3. மாணவியர் முன் அனுமதி பெற்றே விடுப்பு எடுக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களால் முன் அனுமதி பெறாது விடுப்பு எடுக்க நேர்ந்தால், விடுப்பிற்குப் பின் கல்லூரிக்கு வரும் போது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையெழுத்துடன் கூடிய விடுப்புக் கடிதத்தை துறைத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். உடல்நலக் குறைவின் காரணமாகப் பணி நாட்களில் விடுப்பு எடுக்க நேரிட்டால் உரிய மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. காலை நேரக் கல்லூரி மாணவியர் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை கல்லூரி வளாகத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது.

5. மாலைநேரக் கல்லூரி மாணவியர் பிற்பகல் 2.00 மணிமுதல் 6.00 மணிவரை கல்லூரி வளாகத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது. மாணவியரைச் சந்திக்க விரும்பும் பெற்றோர் துறைத் தலைவரின் அனுமதியுடன் முதல்வர் அனுமதியும் பெற வேண்டும்.

6. அடையாள அட்டையை மாணவியர் கல்லூரி வளாகத்தில் அணிதல் அவசியம்.

7. கைப்பேசி (Mobile Phone) எக்காரணத்தைக் கொண்டும் கல்லூரி வளாகத்திற்குள் பயன்படுத்துதல் கூடாது. அவ்வாறு கைப்பேசியை கல்லூரிக்குள் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் உரிய மாணவியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. கல்லூரி வளாகத்தின் உள்ளும், புறமும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவது மாணவியரின் கடமையாகும். மாணவியர் நமது கலாச்சாரத்திற்குப் பொருத்தமற்ற முறையில் உடைகள் அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

9. மாணவியர் கடிதப் பரிமாற்றத்திற்கு கல்லூரி முகவரியைப் பயன்படுத்தக் கூடாது. மீறி கல்லூரி முவரிக்கு மாணவியர் பெயரில் கடிதங்கள் வருமானால் அவற்றை முதல்வரிடமிருந்தே பெற வேண்டும்.

10. மாணவியர் தம் வகுப்பறையையும், கல்லூரி வளாகத்தையும் தூய்மையாகப் பராமரிப்பதும், பிற வகுப்புகளுக்கு இடையூறின்றி இடம் பெயர்வதும் கல்லூரிக்கும், மாணவியர்க்கும், சுற்றுச்சூழலுக்கும் நன்மையானதாகும்.

11. மாணவியர் தம் இருக்கைகள், நூலக நூல்கள், ஆய்வகக் கருவிகள் முதலான கல்லூரி உடைமைகள் நீண்டநாள் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் கையாளுதல் அவசியம்.

12. கல்லூரியின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவது மாணவியரின் கடமை சமூகப் பொறுப்பு. மீறுபவர்கள் மீது முறையான ஒழுங்கு நடவடிக்கையை நிர்வாகம் மேற்கொள்ளும் என்பதை மாணவியர் எப்பொழுதும் நினைவில் கொள்ளுதல் நல்லது.